# தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலை.க்கு புதிய துணைவேந்தர்

சென்னை, டிச. 28: தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராக எஸ்.கீதாலட்சுமி நியமிக்கப்பட்டுள்ளார்.



இதன் 8-ஆவது துணைவேந்தரான சாந்தாராம் டிசம்பர் 12-இல் ஓய்வு பெற்றார். இதையடுத்து, மருத்துவக் கல்வி இயக்குநராகப் பணியாற்றிய எஸ்.கீதாலட்சுமி, 9-ஆவது துணை வேந்தராக திங்கள்கிழமை நியமிக்கப்பட்டார். சென்னை மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி உள்ளிட்டவற்றில் பேராசிரியராகவும், திருவண்ணாமலை அரசு மருத்துவக் கல்லூரி, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் முதல்வராகவும் பணியாற்றியுள்ளார். இதையடுத்து, 2014-இல் மருத்துவக் கல்வி இயக்குநராகப் பொறுப்பேற்றார்.

பல்கலைக்கழகங்கள், கல்வி நிறுவனங்களில் உறுப்பினர்- செயலர், பொருளாளர், செனட் உறுப்பினர் உள்ளிட்ட பொறுப்புகளை வகித்துள்ளார்.